[2010 நவம்பர் 10

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சாலையானது—கடந்த ஆண்டு வெள்ளப் பகுதியைப் பார்வையிடுவதற்காக திருச்சி மாவட்டத்திற்குச் சென்று இருந்தேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அந்தச் சாலையை பார்வையிடச் சொன்னார்கள். அதைப் பார்வையிட்டபோது அந்தச் சாலை உள்ளாட்சிச் சாலையாக இருந்தது. அதன்பின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக ஊரக வளர்ச்சித் துறைக்கு வந்திருப்பதாக அறிகிறேன். விரைவில் அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறை ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில், அதற்கு நிதியொதுக்கீடும் கிடைக்கப் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. விரைவில் அந்தச் சாலையைச் செப்பனிட துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

விடுதி

***62315—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை அரசு பாரதியார் நூற்றாண்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆதி திராவிடர் மாணவியர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையளிக்கிறேன். உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை அரசு பாரதியார் நூற்றாண்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆதி திராவிடர் மாணவியர்களுக்கு ஏற்கெனவே ஆதி திராவிடர் நல மாணவியர்

2010 நவம்பர் 10]

விடுதி ஒன்று உடுமலைப்பேட்டையில் செயல்பட்டு வருவதால் தற்போது விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது பாரதியார் நூற்றாண்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஏற்கெனவே விடுதி உள்ளதாகக் கூறினார்கள். அந்தப் பள்ளியில் 2,400 மாணவியர்கள் படிக்கிறார்கள். S.C. சமூகத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் சுமார் 800 பேர் படிக்கிறார்கள். பெண்கள் படிக்கக்கூடிய அந்தப் பள்ளியிலே போதிய இடவசதியோடு, விடுதிக் கட்டடம் இல்லாத சூழ்நிலையில், அங்கே ஏற்கெனவே 50 மாணவியர்கள் தங்கிப் படிப்பதால், கூடுதலாக இன்னும் 50 மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்காவது உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று கேட்பதோடு கிராமப்புறப் பெண்கள் அங்கே அதிகமாக வந்து படிக்கிறார்கள். அந்தச் சுற்று வட்டாரத்தில் இருந்து வருகிறவர்கள் தங்கிப் படிப்பதற்கு போதிய இடவசதியில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இன்னும் கூடுதலாக 50 குழந்தைகள் அங்கு தங்கிப் படிக்க ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10-30

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசில் இதுவரை 77 புதிய விடுதிகள் துவங்கப்பட்டுள்ளன. இதில் 64 பள்ளி விடுதிகளும், 13 கல்லூரி விடுதிகளும் அடங்கும். உடுமலைப்பேட்டை தொகுதியில் 4 ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகள் இயங்கிவருகின்றன. உடுமலைப்பேட்டை மாணவியர் விடுதியில் 50 மாணவியர்கள் சேர்க்கப்பட்டு படித்துக்கொண்டிருக்கிறார்கள். இது தவிர, கூடுதலாக விண்ணப்பங்கள் வரப்பெற்றதைத் தொடர்ந்து 10 சதவிகிதம் மாணவியர்கள் அங்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மேலும் பிற விடுதிகளில் நிரப்பப்படாமலிருந்த மாணவியர் இடங்கள் நிரவல்மூலமாக இவ்விடுதிக்கு மாற்றப்பட்டு இதுவரை 25 மாணவியர் கூடுதலாக இந்த விடுதியில் சேர்க்கப்பட்டு படித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, 2011-2012 ஆம் கல்வியாண்டில் தலைவர் கலைஞருடைய அரசில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அதிகம் பேர் தங்கிப் படிக்கக்கூடிய சூழல் உள்ளதால் கூடுதல் கட்டடம் கட்டித்தர வேண்டும். அதோடு கடந்த நான்கு ஆண்டுகளாக கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய உடுமலைப்பேட்டை அரசு கலைக் கல்லூரியில் 2,200 மாணவ, மாணவியர்கள் படிக்கிறார்கள். குறிப்பாக S.C. வகுப்பைச் சேர்ந்தவர்கள் 550 பேர் படிக்கிறார்கள். அதிலே பெண்கள் மட்டும் 230 பேர் படிக்கிறார்கள். ஆகவே, மாணவியர் விடுதியானது அரசு கலைக் கல்லூரியிலே அவசியமாகக் கட்டித்தர வேண்டுமென்று பலமுறை சட்டமன்றத்தில் கேள்விமூலமாகவும், வெட்டுத் தீர்மானத்திலும் கேட்டுள்ளேன்; கவன ஈர்ப்புத் தீர்மானத்திலும் கேட்டுள்ளேன். ஆகவே, அரசு இதனைப் பரிசீலனை செய்து அந்தப் பகுதி அதிகமான ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் இருக்கக்கூடிய இடமாக இருப்பதாலும்,. கல்லூரியிலே போதிய இடமும் இருப்பதாலும் இந்த ஆண்டு அல்லது வருகிற ஆண்டிலாவது கண்டிப்பாக உடுமலைப்பேட்டை அரசு கலைக் கல்லூரியிலே ஒரு மாணவியர் விடுதியைக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு துவக்கப்பட்ட 25 புதிய விடுதிகளில்

2010 நவம்பர் 10]

திருப்பூர் மாவட்டத்தில் வெள்ளக்கோவிலில் ஒரு மாணவியர் விடுதி துவக்கப்பட்டுள்ளது. இங்கு அதிகமான ஆதி திராவிட மாணவியர்கள் பயின்றுவருகின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, வருகின்ற ஆண்டில் நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

கட்டட வசதி

***120753—திரு. செ. பொன்னுதுரை:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், சின்னேகவுண்டன்வலசு ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், சின்னேகவுண்டன்வலசு ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடம் கட்டுவதற்கு நிதி ஆதாரம் தற்போது இல்லாத காரணத்தால் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் நிச்சயமாக கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.*

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS